கால்நடை பராமரிப்புத்துறை, திருவாரூர் மாவட்டம்

சிறிய பால்பண்ணை திட்டம் 2017 - 2018

விண்ணப்ப படிவம்

| | | |
|---|---|---|
| 1 | பயனாளியின் பெயர் | |
| 2 | பயனாளியின் முகவரி | |
| 3 | கைபேசி எண் | |
| 4 | மதம்/சாதி | OC/BC/BC-M/MBC/SC/SCA/ST |
| 5 | நிலம் அளவு/சர்வே எண் | |
| 6 | பாசன வசதி | கிணறு/ஆழ் குழாய் வசதி |
| 7 | ஆதார் எண் | |
| 8 | ஏற்கனவே கறவைமாடு வளர்த்த அனுபவம் உள்ளதா | ஆம்/இல்லை |
| 9 | இலவச கறவைப்பசு/ஆடுகள் வளர்ப்பு திட்டப் பயனாளியா? | ஆம்/இல்லை |
| 10 | வங்கி கடன் மூலம் திட்டத்தை செயல்படுத்த விரும்புகிறீர்களா? | ஆம்/இல்லை |
| 11 | குடும்ப அட்டை எண் | |
| 12 | முன்னுரிமை விவரம்<br>விதவை/மாற்றுத்திறனாளி/கணவனால் கைவிடப்பட்டவர்/முன்னால் இராணுவத்தினர் | |
| 13 | தாங்களோ அல்லது தங்கள் குடும்பத்தில் எவரேனும் (கணவர், மகன், மருமகன், மருமகள், தாய், தந்தை, மாமனார், மாமியார்) மத்திய/மாநிலம் அல்லது கூட்டுறவு/உள்ளாட்சி அமைப்புகளில் பணியாளராக உள்ளார்களா? ஆம் எனில் அதன் விவரம் | |
| 14 | வங்கி கணக்கு விவரம்<br>1) வங்கியின் பெயர்<br>2) வங்கி அமைந்துள்ள ஊர்<br>3) கணக்கு எண்<br>4) IFSC Code No | |

## சான்று

1. மேற்கண்ட விவரங்கள் யாவும் உண்மையென சான்றளிக்கிறேன்.
2. இத்திட்டத்தில் பயனடையும் நான் தொடர்ந்து 2 ஆண்டுகள் செயல்படுவேன் என்று உறுதி கூறுகிறேன்.
3. சிறிய பால் பண்ணை அமைக்கும் நான் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராகி பால் ஊற்றுவேன் என கூறுதி கூறுகிறேன்.

மேற்கண்டவற்றில் நான் தவறும் பட்சத்தில் தாங்கள் என் மீது சட்டப்பூர்வமாக நடவடிக்கை எடுக்க சம்மதிக்கிறேன்.

பயனாளியின் கையொப்பம்

**இணைப்பு:**

1. பாஸ்போர்ட் சைஸ் போட்டோ - 2
2. ஆதார் ஜெராக்ஸ்
3. குடும்ப அட்டை ஜெராக்ஸ்
4. வாக்காளர் அடையாள அட்டை ஜெராக்ஸ்
5. நிலம் சிட்டா அடங்கல் நகல்
6. வங்கி கணக்கு புத்தகம்/முதல் பக்கம் ஜெராக்ஸ்
7. வங்கி கடன் முன் அனுமதி கடிதம்

கால்நடை உதவி மருத்துவர் மேலொப்பம்

திருவாரூர் மாவட்டத்தில் 2017 - 2018 ஆம் ஆண்டிற்கு கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் 6 கறவை மாடுகள் கொண்ட சிறிய பால் பண்ணை 3 அலகுகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ.5,00,000- அதில் 25% அரசு மானியம் ரூ1,25,000- வழங்கப்படவுள்ளது.

மேலும் தேர்ந்தெடுக்கப்படவுள்ள பயனாளிகள் கீழ்காணும் தகுதிகள் பெற்றிருக்க வேண்டும்.

- கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களில் பயனாளியாக இருத்தல் கூடாது.
- தீவனப்புல் வளர்ப்பதற்கு தேவையான ஒரு ஏக்கர் பாசன நிலம் பயனாளியின் பெயரில் இருத்தல் வேண்டும்.
- கொட்டகை அமைப்பதற்கான 300 சதுர அடி இடம் இருக்க வேண்டும் - சிட்டா அடங்கல் சமர்ப்பிக்க வேண்டும்.
- தற்பொழுது கறவைப்பசு/எருமைகள் வைத்திருக்க கூடாது.
- பயனாளி மத்திய, மாநில அரசு மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் ஏதேனும் நிறுவனங்களில் பணியில் இருக்க கூடாது. உள்ளாட்சி அமைப்புகளில் பிரதிநிதிகளாக இருக்க கூடாது. பயனாளிகளின் உறவினர்கள் அதாவது கணவன்/மனைவி/தந்தை/தாய்/மாமனார்/மாமியார்/மகன்/மகள்/மருமகன்/மருமகள் இவர்களும் அரசுப்பணியிலோ, கூட்டுறவு நிறுவனங்களிலோ அல்லது உள்ளாட்சி அமைப்புகளிலோ பிரதிநிதிகளாக இருக்க கூடாது.
- பயனாளி கிராம ஊராட்சியில் நிரந்தரமாக குடியிருப்பவராக இருத்தல் வேண்டும்.
- பயனாளிகள் வங்கிக்கடன் மூலம் இத்திட்டத்தினை செயல்படுத்த விரும்பினால், அருகில் உள்ள வங்கி மேலாளரை அணுகி கடன் வழங்க ஒப்புதல் கடிதத்தினை (Provisional loan sanction letter) பெற்று விண்ணப்பத்துடன் இணைத்து அருகிலுள்ள கால்நடை உதவி மருத்துவரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.
- இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 3 சிறிய பால் பண்ணையில் ஒன்று தாழ்த்தப்பட்ட/பழங்குடியின பயனாளிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- சிறிய பால்பண்ணை அமைக்க விண்ணப்பிக்கும் நபர்களில் 3 பயனாளிகளை தேர்வு செய்ய மாவட்ட ஆட்சியர் அவர்களை தலைவராக கொண்ட தேர்வுக் குழுவே இறுதி முடிவு செய்யும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்காணும் தகுதியுள்ள, விருப்பமுள்ள மனுதாரர்கள் அருகில் உள்ள கால்நடை மருந்தகங்களில் விண்ணப்பங்களை பெற்றுக் கொண்டு விண்ணப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பம் சமர்ப்பிக்க கடைசி நாள்:28.05.2018.

மண்டல இணை இயக்குநர்,
கால்நடை பராமரிப்புத்துறை,
திருவாரூர்

மாவட்ட ஆட்சியர்
திருவாரூர்